**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.3/2017**

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3–ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

D.W.1 கெஜலட்சுமி , வயது 63 , க/பெ ஜெயராமன்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பி.வா.சா.ஆ.1 ஆவணம் என் கணவர் ஜெயராமன் அண்ணாமலை என்பவரிடம் கிரையம் பெற்ற ஆவணத்தில் சொத்து விவரத்தில் கி x மே 15 அடி, வ x தெ 33 அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது போல் நில வரைபடத்தில் தற்போது இல்லை என்றால் நாங்கள் அப்படிதான் வாங்கினோம். மேற்படி பி.வா.சா.ஆ.1ல் உள்ள சொத்து விவர அளவுப்படி என் கணவர் பட்டா பெற்றாரா என்றால் இல்லை, ஆனால் பத்திரம் உள்ளது. கிரையம் வாங்கிய பின்னர் ஏன் பட்டா வாங்கவில்லை என்பதற்கு காரணம் சொல்ல முடியுமா என்றால் என் கணவர் இறந்து விட்டார். நாங்கள் தற்போது சென்னையில் வசித்து வருகிறோம்.

2. என் கணவர் எப்போது இறந்தார் என்றால் 2009ம் வருடம் இறந்தார். 1994ம் வருடம் கிரையம் பெற்று 2009ம் ஆண்டு 15 வருடங்கள் கழித்து என் கணவர் இறந்தார் என்றால் சரிதான். என் கணவர் வாங்கிய நிலத்தின் அளவுப்படி அண்ணாமலைக்கும் உரிமை இல்லை, என் கணவருக்கும் உரிமையில்லை என்பதால்தான் பட்டாவிற்கு மனு செய்து பட்டா பெறவில்லை என்றால் நாங்கள் யாரும் ஊரில் இல்லை, சென்னையில் வசித்து வருகிறோம். 1994ம் வருடத்திலிருந்து 2009ம் ஆண்டு வரை மேற்படி சொத்துக்களை என் கணவர் அனுபவித்து வந்ததற்கான ஆவணம் ஏதேனும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. மேற்படி காலத்தில் நான், என் கணவர் மற்றும் என் பிள்ளைகள் அனைவரும் சென்னையில்தான் வசித்து வருகிறோம். பி.வா.சா.ஆ.1 ஆவணம் சட்டப்படி ஏற்புடையதல்ல, ஆகையால் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிராம நத்த சர்வே எண்.32/8 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஐ

என் கணவர் கோபால் நாயுடு என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 சொத்து எவ்வாறு கோபால் நாயுடுவிற்கு கிடைத்தது என்ற விவரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது.

4. கிராம நத்த சர்வே 32/8 வழக்கு சொத்தின் முந்தைய சர்வே எண் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 சொத்து விவரத்தில் கிராம நத்த சர்வே எண். 31/11 என உள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு சரிதான் என்று கூறினார். மேற்படி பி.வா.சா.ஆ.2 வழக்கு சொத்தின் முந்தைய சர்வே எண் கிடையாது என்றால் சர்வே எண். 32/8 தான் எங்களுடையது, தற்போதுதான் ஆவணத்தை பார்த்து சர்வே எண். 31/11 என உள்ளது என்ற விவரம் தெரிய வந்தது. மேற்படி பி.வா.சா.ஆ.2 வழக்கு சொத்திற்கு சம்மந்தமில்லாத ஆவணம் என்றால் 32தான் எனக்கு தெரியும், 31 பற்றி எனக்கு தெரியாது.

5. அண்ணாமலை பிள்ளை கோவிந்தசாமிபிள்ளையிடமிருந்து 12.07.1961ம் தேதி கிரையம் பெற்றதாக என்னுடைய பதிலுரையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு அப்போது கல்யாணம் ஆகவில்லை, 1961ம் ஆண்டு அண்ணாமலைதான் மேற்படி இடத்தை வாங்கினார், நாங்கள் 1994ம் ஆண்டுதான் அண்ணாமலையிடமிருந்து கிரையம் பெற்றோம். அண்ணாமலை பிள்ளை கோவிந்தசாமிபிள்ளையிடமிருந்து 12.07.1961ம் தேதி கிரையம் பெற்றதாக என்னுடைய பதிலுரையில் குறிப்பிட்டுள்ளதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது.

6. என் கணவர் உயிருடன் இருக்கும் போதே ஒரு குடும்ப ஏற்பாடு முன்னிலைக்கு அந்த மனைகள் ஒதுக்கப்பட்டு அதை நான் ஏற்றுக் கொண்டேன் என்று என் முதல் விசாரணை 2ம் பத்தியில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். குடும்ப ஏற்பாடு எந்த வருடம், யார் யார் முன்னிலையில் நடந்தது என்றால் அப்பாவு, கோவிந்தராஜ், வரதன், சம்பத், ரங்கசாமி ஆகியோர் முன்னிலையில் 1994ம் வருடம் நடைபெற்றது, எந்த மாதம் என்று எனக்கு தெரியாது. மேற்படி நபர்களை எனது தரப்பு சாட்சிகளாக விசாரிக்க முடியுமா என்றால் முடியும்.

7. 1994ம் ஆண்டில் குடும்ப ஏற்பாடு செய்யப்பட்ட நாளிலிருந்து நாங்கள்தான் சொத்தை அனுபவித்து வருகிறோம் என்பதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை, நாங்கள் சென்னையில் வசித்து வருகிறோம். என்னுடைய முதல் விசாரணை பத்தி 5ல் 07.03.2016ம் தேதி செய்யாறு துணை வட்டாட்சியர் அவர்களிடம் ஆட்சேபணை மனு என் பெயரில் கொடுத்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆட்சேபணை மனுவின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

8. பி.வா.சா.ஆ.3ல் மனு நாள் 28.09.2016 என உள்ளது என்றால் சரிதான். அதேப்போல் முதல் விசாரணை பத்தி 5ல் 07.03.2016ம் தேதி செய்யாறு துணை வட்டாட்சியர் அவர்களிடம் ஆட்சேபணை மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். சரவணன் அப்பாவிற்கு நத்தம் நிலவை திட்டத்தில் 1993ம் ஆண்டு பட்டா கொடுக்கப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1993ம் ஆண்டு சரவணன் அப்பாவிற்கு நத்தம் நிலவை திட்டத்தில் பட்டா கொடுத்ததற்கு ஆட்சேபணை தெரிவித்து நான் வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் எனக்கு தெரியாது, அண்ணாமலை பிள்ளை கொடுத்தார் வாங்கினோம்.

9. 1993ம் ஆண்டிலிருந்து பட்டா பெற்று தேவேந்திரன் ஆண்டு அனுபவித்து வரி செலுத்தி ரசீது வைத்துள்ளார் என்றால் அவர் அங்கு வசிக்கவேயில்லை. தேவேந்திரன் ஆண்டு அனுபவித்து வந்துதான் சரவணன் மற்றும் செல்வகுமார் ஆகியோருக்கு வா.சா.ஆ.6 தான செட்டில்மெண்ட் 2016ம் ஆண்டு எழுதி கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து வித்துவாந்தாங்கல் கிராமத்தில் உள்ளது என்றாலும், வாதிகள் சேவூரில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

10. தாவா சொத்தின் மேற்கில் பஜனை கோயில் தெருவும், அதன் மேற்கில் சரவணன், செல்வகுமார் வீடும் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து வித்துவாந்தாங்கல் கிராமத்தில் உள்ளது என்றாலும், வாதிகள் சேவூரில் வசித்து வருகிறார்கள் என்றாலும், நாங்கள்தான் அத்துமீறி நுழைந்து பிரச்சினை செய்கிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் அத்துமீறி

நுழைந்ததால்தான் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நாங்கள் வாதிகள் மீதும், வாதிகள் எங்கள் மீதும் ஆரணி கிராமிய காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான்.

11. அதேப் போல் வழக்கறிஞர் ஆணையர் தாவா இடத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான். வழக்கறிஞர் ஆணையர் என்ன அறிக்கை தாக்கல் செய்தார் என்ற விவரத்தை என் வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனே என்றால் தெரியாது. வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் கி x மே 15 அடி, வ x தெ 33 அடி என்று குறிப்பிடவில்லை என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது.

12. வழக்கு சொத்தை நான் எந்த காலத்திலும் அனுபவித்ததில்லை என்றால் மேற்படி இடம் காலி மனையாக உள்ளது, அதற்கான வரி ரசீதுகள் மற்றும் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்கிறேன். தாவா இடம் வாதிகளுக்குதான் உரிமையானது என்பதால் அவர்கள் கோரிய தாவாபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-D.V.Koperundevi
District Munsif,
Arni